2005 மார்ச் 29]

(ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திருமதி வளர்மதி ஜெபராஜ்.

***திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2005 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஐம்பத்து ஐந்தாவது மற்றும் ஐம்பத்து ஆறாவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 13 – எரிசக்தித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,093,36,73,000/–, மூலதனக் கணக்கில் ரூ.25,00,00,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.108,61,81,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2273, திரு. அ.இரா. மலையப்பசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3444, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4305, திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.